RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 106 ஏப்ரல்.23 2026 வியாழக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# 200 தொகுதிகளில் திமுக வெற்றி உறுதி: இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஸ்டாலின் சபதம்

சென்னை, ஏப்.23-

முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை, சைதாப்பேட்டை தொகுதியில் வேட்பாளர் மா.சுப்பிரமணியனை ஆதரித்து நடந்து சென்று பொது மக்களை சந்தித்து வாக்கு சேகரித்தார்.

திமுக 200 தொகுதிகளில் உறுதியாக வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரம் நேற்று மாலையுடன் முடிவடைந்தது. இறுதிநாளான நேற்று திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின், சென்னையில் வில்லிவாக்கம் மற்றும் தான் போட்டியிடும் கொளத்தூர் தொகுதிகளில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார்.

வில்லிவாக்கம் தொகுதியில் முதல்வர் ஸ்டாலின் பேசும் போது, “திமுக ஆட்சி அமைந்த பிறகு 90 சதவீதத்துக்கு மேலான தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளோம். மிச்சமுள்ள உறுதிமொழிகூட மத்திய அரசு நிதி தராததால் தடைப்பட்டது. எனினும், மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தினோம்.

முதலில் ஸ்டாலினுக்கு கட்டம் சரியில்லை, ஆட்சிக்கு வர முடியாது என்றார்கள். ஆனால் வந்தோம். இப்போது திமுக தொடர்ந்து 2வது முறையாக ஆட்சிக்கு வந்ததில்லை என கூறுகிறார்கள். இந்த விமர்சனத்தை உடைத்து மீண்டும் ஆட்சி அமைப்போம். பதவிக்காக இல்லை, ஒட்டுமொத்த தமி



ழகத்துக்காகதான் கூறுகிறேன். எனவே, 2வது முறையாக என் தலைமையில் திமுக ஆட்சி அமைய வாக்களிக்க வேண்டும்” என்றார்.

தொடர்ந்து கொளத்தூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஸ்டாலின் பேசியதாவது: ஒட்டுமொத்தத் தமிழகத்துக்கும் நான் முதல்வராக இருந்தாலும், கொளத்தூர் எனது செல்லக் குழந்தை. இந்த தொகுதிக்கு பல்வேறு நலத்திட்டங்களை செய்துள்ளேன். அந்த பணிகள்தான் எனக்காக இங்கு ஒட்டு கேட்டிருக்கின்றன. ஏற்கனவே ஒரு மாடல் தொகுதியாக கொளத்தூரை மாற்றி வைத்திருக்கிறேன். இன்னும் சிறப்பாக கொளத்தூரை மேம்படுத்துவேன்.

அதிமுகவிடம் ஆட்சி சென்றால், டெல்லி ரிமோட் கன்ட்ரோல் ஆட்சிதான் நடைபெறும். நமது அனைத்து திட்டங்களும் நின்றுபோய்விடும். மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடனே இல்லத்தரசி திட்டத்துக்குதான் முதல் கையெழுத்து. இதேபோல், 500க்கும் மேற்பட்ட வாக்குறுதிகள் கொண்ட தொலைநோக்கு ஆவணமாக நம் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அடுத்த 5 ஆண்டில் அதையெல்லாம் நிறைவேற்றி விட்டு, 2031 தேர்தலின்போது வாக்கு கேட்டு நான்தான் மீண்டும் வருவேன். இது சத்தியம். திமுக 200 தொகுதிகளில் உறுதியாக வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

இதேபோல், முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட காணொலியில், “நமது தமிழகத்தின் எதிர்காலத்தை நீங்கள் எழுதப் போகும் நாள். உங்களை யாராலும் ஏமாற்ற முடியாது. உங்களுக்கு தெரியும். எது உண்மை? எது பொய்? எது நடிப்பு? எது உழைப்பு? யார் நரி? யார் சிங்கம்? அடிமைத்தனம் எது? தைரியம் எது? அனைத்துமே உங்களுக்கு நன்றாகவே தெரியும்.

நாம் வீழ்த்திய எதிரிகளின் சதிகளை எண்ண ஆரம்பித்தால், அதற்குள்ளாக தேர்தல் முடிவே வந்துவிடும். நமது திட்டங்களை, அதனால் விளைந்த நன்மைகளை நான் பட்டியலிட ஆரம்பித்தால், அடுத்த தேர்தலே வந்துவிடும்.

எனக்கு நீங்கள் கொடுத்த கடமையை என்னால் முடிந்த வரைக்கும் சரிவரச் செய்துவிட்டேன். உங்கள் கடமையை நீங்களும் சரிவர செய்ய வேண்டும். அடுத்த 5 ஆண்டுகளுக்கு இதுவரை யாரும் காணாத ஒரு பெரிய கனவோடு காத்திருக்கிறேன். இனி நமது போட்டி டெல்லியுடன் மட்டும் இருக்காது. தெற்காசியாவில் அனைத்துத் துறைகளிலும் முதல் மாநிலமாக தமிழகத்தை மாற்றிக் காட்டுவேன். மண், மொழி, மானம் மூன்றையும் காப்பாற்ற மூச்சு இருக்கும் வரைக்கும் போராடுவேன்” என்று தெரிவித்துள்ளார்.

## சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிப்பதற்காக வெளிநாடுகளில் இருந்து தமிழகம் திரும்பும் மக்கள்

சென்னை: ஏப்.23-

வேலைக்காகவெளிநாடுகளுக்கு சென்றவர்கள் சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிப்பதற்காக, விமானங்கள் மூலம் தமிழகம் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் இன்று நடைபெறவுள்ளது.



இந்த தேர்தலில் 5.73 கோடி பேர் வாக்களிக்க உள்ளனர். இதற்கிடையில், வேலைக்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ள தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் குழுவாகவும், தனித்தனியாகவும் விமானம் மூலம் தமிழகம் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து சென்னைக்கு தினமும் 8 ஆயிரம் முதல் 8,500 பயணிகள் வருவது வழக்கம். ஆனால் கடந்த சில நாட்களாக சென்னைவரும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

வெளிநாடுகளில் இருந்தாலும் தங்களுடைய ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என்பதற்காக மக்கள் வருவது தேர்தல் ஆணைய அதிகாரிகளை ஆச்சரியமடைய வைத்துள்ளது.

## ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம்: புகார் தெரிவிக்க உதவி எண்கள் அறிவிப்பு

சென்னை: ஏப்.23-

ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் குறித்து புகார் தெரிவிக்க உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.



இது குறித்து போக்குவரத்து ஆணையர் கிரண் குராலா வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஸ்ரீ 2026, நாளை 23ம் தேதி அன்று வாக்குப்பதிவு நடைபெறுவதை முன்னிட்டு, ஏப்.21ம் தேதி முதல் 26ம் தேதி வரை மக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால், அதனைத் தடுக்க தமிழகம் முழுவதும் வட்டாரப்போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச்சாவடி ஆய்வாளர்கள் அடங்கிய சிறப்புக்குழு அமைக்கப்பட்டு, அவ்வாறு இயங்கும் ஆம்னி பேருந்துகளை தீவிரமாக சோதனை செய்து அனுமதி ரத்து போன்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதாக தெரியவந்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கைபேசி எண்கள் மூலம், வாட்ஸ் ஆப், குறுஞ்செய்தி குரல் பதிவு மூலமாக புகார் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம், சென்னை 1800 425 6151, இணைப்போக்குவரத்து ஆணையரகங்கள் சென்னை (வடக்கு) 99442 53404, சென்னை (தெற்கு) 97905 50052, மதுரை 90953 66394, கோவை 91235 93971, துணைப் போக்குவரத்து ஆணையரகங்கள் விழுப்புரம் 96773 98825, வேலூர் 98400 23011, சேலம் 78456 36423, ஈரோடு 80569 40040, திருச்சி 90660 32343, விருதுநகர் 90257 23800, திருநெல்வேலி 96981 18011, தஞ்சாவூர் 95850 20865 ஆகிய எண்களில் புகார் தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

## தமிழகத்தில் ரூ.1,262 கோடி மதிப்பில் பணம், பரிசுப் பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல்: அர்ச்சனா பட்நாயக்

சென்னை: ஏப்.23-

தமிழகத்தில் (ஏப்.21) மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்த நிலையில், இதுவரை ரூ.1,262 கோடி மதிப்பில் பணம், பரிசுப் பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். இதில் ரொக்கப் பணம் மட்டும் ரூ.543 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இதுவரை 4.18 லட்சம் தபால் வாக்குகள் பதிவாகி உள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்று (ஏப்.23) ஒரே கட்டமாக நடைபெற உள்ள நிலையில், தேர்தலை ஒட்டி மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில், “தமிழகத்தில் தேர்தல் பணியில் உள்ள அரசு ஊழியர்கள் இன்று வரை தபால் ஓட்டுக்களை போட முடியும். இதுவரை 4,18,541 வாக்குகள் போடப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 33,133 இடங்களில் மொத்தம் 75,064 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில்




249 மாதிரி வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெண் பணியாளர்கள் நடத்தும் வாக்குச்சாவடிகள் 325 ஆக உள்ளது, இளைஞர்கள் மட்டுமே நடத்தும் வாக்குச்சாவடிகள் 79 ஆக உள்ளது. 5,949 வாக்குச்சாடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்காக 1,06,418 வாக்குச்சாவடி இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளன. இதேபோல், 75,064 கட்டுப்பாட்டு கருவிகளும், 75,064 விவி பேட் கருவிகளும் கையிருப்பில் உள்ளன. தேர்தல் பணிக்கு போதிய அளவு இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளன. வாக்குச்சாவடி இயந்திரங்கள் மற்றும் கன்ட்ரோல் யூனிட் ஆகியவற்றை பொருத்தவரை 20 சதவீதம் அளவுக்கு கூடுதலாக உள்ளன. விவிபேட் 30 சதவீதம் அளவுக்கு கூடுதலாக கையிருப்பில் உள்ளது.

வாக்குப்பதிவு மையங்களில் 3 லட்சத்து 60 ஆயிரத்து 68 அதிகாரிகள் பணியில் இருப்பார்கள். பாதுகாப்புப் பணிகளில் மொத்தம் 83,875 காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். கால் சென்டர் (எண் 1950), மீடியா கண்காணிப்பு, செலவு கண்காணிப்பு, வாக்குப்பதிவு கண்காணிப்பு என மொத்தம் 4 கட்டுப்பாட்டு அறைகள் முழு வீச்சில் செயல்பட்டு வருகின்றன.

தேர்தலை ஒட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு பணிகள் காரணமாக இதுவரை ரூ.1,262 கோடி மதிப்பில் தங்கம், மதுபானங்கள், பரிசுப் பொருட்கள், ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இவற்றில், ரூ.543 கோடி அளவுக்கு ரொக்கமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சமூக ஊடக பதிவுகள் தொடர்பாக 243 விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. 163 புகார்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 2,180 தவறான சமூக ஊடக பதிவுகளின் யுஆர்எல் பிளாக் செய்யப்பட்டுள்ளது. பல்வேறு தரப்புகளில் இருந்து 5,634 புகார்கள் பெறப்பட்ட நிலையில், அவற்றில் 17 புகார்கள் நிலுவையில் உள்ளன. அவற்றுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மே 4ம் தேதி மொத்தம் 62 மையங்களில் வாக்குகள் எண்ணப்பட உள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்” என்றார்.

## மெட்ரோ ரயில் பயணத்துக்கு மே 1 முதல் சிங்கார சென்னை அட்டைக்கு முழுமையாக மாற திட்டம்

சென்னை: ஏப்.23-

மெட்ரோ ரயில் பயண அட்டை பயன்பாட்டிலிருந்து சிங்கார சென்னை அட்டைக்கு மே 1ம் தேதிமுதல், முழுமையாக மாற திட்டமிடப்பட்டுள்ளது. எனவே பழைய பயண அட்டையில் மீதமுள்ள தொகையை, சிங்கார சென்னை அட்டைக்கு மாற்றிக் கொள்ள சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

சென்னை மெட்ரோ ரயிலில் டிக்கெட் எடுக்க, கவுன்ட்டர்களில் பயணிகள் வரிசையில் நெடுநேரம் காத்திருப்பதைத் தவிர்க்க சி.எம்.ஆர்.எல். பயண அட்டை கடந்த 2015ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. 5 ஆண்டுகள் வரை செல்லுபடியாகும் இந்த அட்டையை பயன்படுத்தும்போது, 20 சதவீதம் கட்டணத் தள்ளுபடி கிடைக்கும்.

இதற்கிடையில் தேசிய பொது போக்குவரத்து அட்டையை (சிங்கார சென்னை அட்டை) மெட்ரோ ரயில் நிறுவனம் கடந்த 2023ம் ஆண்டு ஏப்.14ம் தேதி அறிமுகப்படுத்தியது. இந்த அட்டையை ஊக்கப்படுத்த மெட்ரோ ரயில்




நிறுவனம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வந்தது.

மேலும், சிங்கார சென்னை அட்டைக்கு முழுமையாக மாற கடந்த ஆண்டு ஏப்.1ம் தேதி நடவடிக்கை எடுக்கப்பட்டது. 41 மெட்ரோ ரயில் நிலையங்களிலும் படிப்படியாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவன பயண அட்டைகளை ரீசார்ஜ் செய்யும் வசதி நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து பயண அட்டையில் உள்ள மீதித் தொகையை மெட்ரோ ரயில்களில் பயணிப்பதற்கும், மெட்ரோ ரயில் நிலையங்களில் வாகனம் நிறுத்துவதற்கும் பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில் மெட்ரோ ரயில் நிறுவன பயண அட்டை பயன்பாட்டிலிருந்து சிங்கார சென்னை அட்டைக்கு மே 1ம் தேதிமுதல், முழுமையாக மாற திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: மெட்ரோ ரயில்களில் பயணிக்க சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் பயண அட்டையுடன் கூடுதலாக ‘சிங்கார சென்னை அட்டை (தேசிய பொது போக்குவரத்து அட்டை)’ அறிமுகப்படுத்தப்பட்டது.

மத்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி, நாடு முழுவதும் உள்ள பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் தடையற்ற பயணத்தை உறுதி செய்யும் வகையில், மே 1ம் தேதிமுதல், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சிங்கார சென்னை அட்டைக்கு முழுமையாக மாற திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, மெட்ரோ ரயில்களில் பயணம் செய்யவும், வாகன நிறுத்தங்களை பயன்படுத்தவும், பயணிகள் தங்களது பழைய பயண அட்டையில் மீதமுள்ள தொகையை, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மொபைல் செயலி (Mobile App) மூலம் பெறப்படும் QR Stored Value Pass (SVP) அல்லது தேசிய பொது போக்குவரத்து அட்டைக்கு மாற்றிக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# ஜே இ இ Main தேர்வில் ( joint Entrance Examination Main) அகில இந்திய அளவில் ஸ்ரீசைதன்யா கல்வி நிறுவனம் சாதனை




பூந்தமல்லி ஏப்.23-

சென்னை அடுத்த பூந்தமல்லி அருகே தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் ஜே இ இ மெயின் தேர்வு 2026 ஆம் ஆண்டுக்கான தேர்வு முடிவுகள் ஏப்ரல் 20ஆம் தேதி அன்று வெளியிடப்பட்டது.இதில் ஸ்ரீ சைதன்யா கல்வி நிறுவனம் இந்த ஆண்டு அபாரமான வெற்றியை பெற்று சாதனை படைத்துள்ளது இதில் பசலா மோகித் மற்றும் பி.வி.சந்திரசேகர் ரெட்டி ஆகிய இரண்டு மாணவர்கள் 300க்கு 300 மதிப்பெண் முழுமையாக பெற்று அகில இந்திய அளவில் முதல் இடத்தை பிடித்துள்ளனர் பொது பிரிவில் அகில இந்திய அளவில் 1, 1, 8, 11 மற்றும் 15 ஆகிய இடங்களை பெற்று ஸ்ரீசைதன்யா கல்வி நிறுவனம் மீண்டும் ஒரு சாதனை படைத்துள்ளது மொத்தத்தில் ஸ்ரீசைதன்யா பள்ளியை சேர்ந்த 27 மாணவர்கள் முதல் 100 இடங்களுக்குள்ளும், 166 மாணவர்கள் தேசிய அளவில் முதல் 1000 இடங்களுக்குள்ளும் தரவரிசைகளை பெற்றுள்ளனர்.JEE தேர்வில் தமிழ்நாடு ஸ்ரீ சைதன்யா பள்ளிகள் சிறப்பான சாதனை புரிந்துள்ளது.சென்னை நொளம்பூரில் உள்ள ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியை சேர்ந்த அபிஜித்சதீஷ் அகில இந்திய அளவில் 60 வது இடத்தையும், பெரும்பாக்கத்தை சேர்ந்த எஸ்.டி.வத்சன் அகில இந்திய அளவில் 166 வது இடத்தையும் பெற்று ஸ்ரீ சைதன்யா பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் அனைத்து பிரிவுகளிலும் 25 மாணவர்கள், முதல் ஆயிரம் இடங்களுக்குள் வெற்றி பெற்றுள்ளனர்.

59 மாணவர்கள், 99 சதவீதத்திற்கும் மேலான மதிப்பெண்களை பெற்றுள்ளனர். 250 மாணவர்கள், 95 சதவீதத்திற்கும் மேல் மதிப்பெண் பெற்றுள்ளனர்.

இந்தத் தேர்வின் மூலம் ஸ்ரீ சைதன்யா கல்வி நிறுவனம் வலுவான கல்வி அடித்தளமும், தொடர்ச்சியான செயல் திறனையும் வெளிப்படுத்தியுள்ளது .

இதனால் சுமார் ஆயிரம் மாணவர்கள் தகுதி பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை, நொளம்பூர் ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியில் JEE main தேர்வில்அதிக மதிப்பெண்கள் பெற்று அகில இந்திய அளவில் சாதனை படைத்த மாணவ, மாணவிகளை பாராட்டி விழா நடைபெற்றது.இதில்சிறப்பு விருந்தினராக ஸ்ரீசைதன்யா பள்ளிகளின் இயக்குனர் சீமாபோபன்னா மற்றும் தமிழ்நாடு செயல்பாட்டு தலைவர் அரிபாபு ஆகியோர் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளையும், ஆசிரியர் பெருமக்களை பாராட்டி பொன்னாடை அணிவித்து, சாதனையாளர் விருது வழங்கினர். அதைத்தொடர்ந்து அகில இந்திய அளவில் வெற்றி பெற்று சாதனை புரிந்த மாணவர்களுடன் சேர்ந்து சிறப்பு விருந்தினர்கள் மற்றும் ஆசிரியர் பெருமக்கள் கேக்வெட்டி, தங்களது மகிழ்ச்சியை கொண்டாடினர்.இந்த நிகழ்ச்சியில் ஸ்ரீ சைதன்யா பள்ளிகளின் ஆசிரியர் பெருமக்கள், மாணவர்கள், பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் முன்னிட்டு வாக்குசாவடி அலுவலர்கள் நுண்பார்வையாளர்களுக்கான இறுதிகட்ட சீரற்றமயமாக்கல் பணி

நீலகிரி ஏப்.23-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு, வாக்குச்சாவடி அலுவலர்கள், காவல் அலுவலர்கள் மற்றும் நுண் பார்வையாளர்களுக்கான இறுதிகட்ட சீரற்றமயமாக்கல் பணியினை (Randomization) பொது பார்வையாளர்கள், 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி தான்வி சுந்த்ரியல், , 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி எஸ். ஹரீஷ், 110 குன்னூர் சட்டமன்ற தொகுதி சுஹாஸ் , பார்வையாளர் லதா மனோஜ் ஆகியோர் தலைமையிலும், மாவட்ட தேர்தல் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (21.04.2026) அன்று நடைபெற்றது.அலுவலர் /காவல்



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யை முன்னிட்டு, வாக்குச்சாவடி அலுவலர்கள், காவல் அலுவலர்கள் மற்றும் நுண்பார்வையாளர்களுக்கான இறுதி கட்ட சீரற்றமயமாக்கல் பணியானது (Randomization) நடைபெற்றது. இதில் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதிக்கு தலா 305 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்கள், நிலை 1, நிலை 2 மற்றும் நிலை 3 என மொத்தம் 1,220 வாக்குச்சாவடி அலுவலர்களும், 109 கூடலூர் சட்டமன்ற தொகுதிக்கு தலா 286 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்கள், நிலை 1, நிலை 2 மற்றும் நிலை 3 என மொத்தம் 1,144 வாக்குச்சாவடி அலுவலர்களும், 110 குன்னூர் சட்டமன்ற தொகுதிக்கு தலா 292 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்கள், நிலை 1, நிலை 2 மற்றும் நிலை 3 என மொத்தம் 1,168 வாக்குச்சாவடி அலுவலர்களும் என மொத்தம் மூன்று தொகுதிகளில் உள்ள 736 வாக்குச்சாவடிகளுக்கு 3,532 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கும் (120%), 406 காவல் அலுவலர்களுக்கும், 93நுண் பார்வையாளர்களுக்கும் இறுதிகட்ட சீரற்றமயமாக்கல் பணி நடைபெற்றது.அதனை தொடர்ந்து, பொது பார்வையாளர்கள், 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி அவர்கள், 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி அவர்கள், 110 குன்னூர் சட்டமன்ற தொகுதிஅவர்கள், காவல் பார்வையாளர் அவர்கள் ஆகியோர் தலைமையில், நுண் பார்வையாளர்களுக்கான தேர்தல் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.மாவட்ட காவல் இந்நிகழ்வில், கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி உட்பட பலர் கலந்து கொண்டனர்

# கோவை தெற்கு தொகுதியில் தேர்தலை ரத்து செய்ய கோரி அதிமுக வேட்பாளர் தர்ணா

கோவை, ஏப்.23-

கோவை தெற்கு தொகுதியில் தேர்தலை ரத்து செய்ய வலியுறுத்தி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அதிமுக வேட்பாளர் இன்று தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார்.கோவை தெற்கு தொகுதியில் திமுக வேட்பாளராக முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, அதிமுக வேட்பாளராக மாவட்ட செயலாளர் அம்மன் கே.அர்ச்சுணன் உள்ளிட்டோர் போட்டியிடுகின்றனர். சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளை (ஏப்.23) நடைபெற உள்ளது.இந்நிலையில், அதிமுக வேட்பாளர் அம்மன் கே.அர்ச்சுணன் மற்றும் நிர்வாகிகள், கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு இன்று (ஏப்.22) வந்தனர். பின்னர், அவர்கள் ஆட்சியர் அலுவலக புதிய கட்டிடத்தின் நுழைவாயிலில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். பாஜக மாவட்ட தலைவர் ரமேஷ்குமார் உள்ளிட்ட கூட்டணிக் கட்சியினரும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.தேர்தல் நெருங்கும் வேளையில், கடந்த சில நாட்களாக கோவை தெற்கு தொகுதியில் திமுக சார்பில் வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் கொடுக்கப்பட்டு வருவதாகவும், அதை தடுக்க வலியுறுத்தி மனுக்கள் அளித்தாலும் மாவட்ட தேர்தல் அலுவலர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், இதனால் கோவை தெற்கு தொகுதியில் தேர்தலை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி வேட்பாளர் அம்மன் அர்ச்சுணன் மற்றும் நிர்வாகிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.தொடர்ந்து தகவல் அறிந்து அங்கு வந்த காவல் துறையினர், போராட்டத்தில் ஈடுபட்ட அவரிடம் பேச்சு வார்த்தை நடத்தினார்.அப்போது செய்தியாளர்களிடம் அம்மன் கே.அர்ச்சுணன் கூறும்போது, “ கோவை தெற்கு தொகுதியில் தேர்தலை ரத்து செய்ய வேண்டும. கோவை தெற்கு தொகுதியில் திமுகவினர் வாக்காளர்களுக்கு வாக்குக்காக பணம் கொடுக்கின்றனர். பணம் கொடுப்பவர்களை பிடித்துக் கொடுத்தாலும், போலீஸார் நடவடிக்கை எடுப்பதில்லை’’ என்றார்





# திருச்சூர் பட்டாசு ஆலையில் வெடி விபத்து 13 பேர் உயிரிழப்பு

திருச்சூர், ஏப்.23-

கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டம் முண்டத்திகோட் பகுதியில் பட்டாசுத் தொழிற்சாலை உள்ளது.

திருச்சூர் மாவட்டத்தில் ஆடிப்பூரம் திருவிழா மிகவும் விமரிசையாக நடைபெறும். அப்போது வாண வேடிக்கைகள் அதிக அளவில் நடைபெறும். அதற்காக இந்தத் தொழிற்சாலையில் பட்டாசு தயாரிக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வந்தன. இந்நிலையில் நேற்று தொழிற்சாலையில் 65க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது ஆலையில் வெடிவிபத்து ஏற்பட்டு பட்டாசுகள் வெடித்துச் சிதறின.

இதையடுத்து அங்கிருந்த தொழிலாளர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினர். இதில் 13 தொழிலாளர்கள் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 40 பேர் காயமடைந்து திருச்சூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் 5 பேர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். திருச்சூர் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

பிரதமர் இரங்கல்: இதுதொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் கூறும்போது, "இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் குணமடைய வேண்டிக் கொள்கிறேன். இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு தலா ரூ.2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் இழப்பீடு வழங்கப்படும்" என்றார்.

# பாகிஸ்தான் உளவாளி ஷாசாத் பாட்டி உத்தரவின் பேரில் டெல்லியில் தாக்குதல் நடத்த திட்டமிட்ட இருவர் கைது

புதுடெல்லி, ஏப்.23-

பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட கும்பல் தலைவனும், அந்நாட்டு உளவு (ஐஎஸ்ஐ) அமைப்பின் முகவருமான ஷாசாத் பாட்டி என்பவரின் தூண்டுதலின் பேரில் செயல்பட்டு வந்த 2 பேரை டெல்லி காவல் துறையின் சிறப்புப் பிரிவு நேற்று கைது செய்துள்ளது.இது குறித்து டெல்லி காவல் துறை சிறப்புப் பிரிவின் துணை ஆணையர் பிரவீன் குமார் திரிபாதி கூறும்போது, “மத்தியப் பிரதேசத்தின் குவாலியரைச் சேர்ந்த ராஜ்வீர் (21) மற்றும் விவேக் பஞ்சாரா (19) ஆகிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம் டெல்லி என்சிஆர் பகுதியில் துப்பாக்கிச் சூடு, கையெறி குண்டுத் தாக்குதல்கள் மற்றும் திட்டமிட்ட கொலைகளைச் செய்யத் தீட்டப்பட்டிருந்த ஒரு பெரிய குற்றச் சதி



முறியடிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்கள் வழியாக இளைஞர்களைக் கவர்ந்து, அவர்களை டெல்லிஎன்சிஆர் பகுதியில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுத்தி வந்த ஷாசாத் பாட்டி மற்றும் ஐஎஸ்ஐ தொடர்புள்ள கையாட்களின் சதியை இது அம்பலப்படுத்தியுள்ளது” என்றார்.வழக்கின் பின்னணி: டெல்லியில் கையெறி குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கி மூலம் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகக் கிடைத்த ரகசிய தகவலைத் தொடர்ந்து, கடந்த மார்ச் 31ம் தேதி வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

ஏப்ரல் 16ம் தேதி மத்திய பிரதேச மாநிலம் குவாலியரின் டப்ராவில் இருந்து விவேக் பஞ்சாரா முதலில் கைது செய்யப்பட்டார். ஏப் .18ல் விவேக் அளித்த தகவலின் அடிப்படையில், டெல்லியின் சராய் காலே கான் பகுதியில் ராஜ்வீர் கைது செய்யப்பட்டார்.ராஜ்வீர் கைது செய்யப்பட்டபோது, ஷாசாத் பாட்டியின் உத்தரவின்படி டெல்லி என்சிஆரில் உள்ள ஒரு முன்னணி ஓட்டலில் தாக்குதல் நடத்தத் தயாராகிக் கொண்டிருந்ததாகக் காவல் துறையினர் தெரிவித்தனர். அவரிடமிருந்து ஒரு பிஸ்டல், 6 தோட்டாக்கள் மற்றும் சதித் திட்டம் தொடர்பான வீடியோக்கள், குரல் பதிவுகள் கொண்ட இரண்டு மொபைல் போன்கள் பறிமுதல் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# வாக்களிக்க சொந்த ஊர் செல்ல வசதியாக சென்னையில் இருந்து மதுரைக்கு முன்பதிவில்லா ரயில் இயக்கம்

சென்னை, ஏப்.23-

தேர்தலில் வாக்களிக்க சொந்த ஊருக்கு சென்று திரும்பும் பயணிகள் வசதிக்காக, சென்னையில் இருந்து மதுரைக்கு முன்பதிவில்லா சிறப்பு ரயில் இன்று இயக்கப்படுகிறது. போத்தனூருக்கும் சிறப்பு ரயில் அறிவிக்கப்பட்டுள்ளது.சென்னை எழும்பூரில் இருந்து இன்று (ஏப்.22) இரவு 11.55 மணிக்கு சிறப்பு ரயில் (06179) புறப்பட்டு, மறுநாள் காலை 9.30 மணிக்கு போத்தனூரை சென்றடையும். இந்த ரயில் பெரம்பூர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை, சேலம், ஈரோடு, திருப்பூர் வழியாக போத்தனூரை அடையும்.சென்னை எழும்பூரில் இருந்து இன்று (ஏப் .22) இரவு 9.55 மணிக்கு முன்பதிவில்லாத மெமு சிறப்பு ரயில் (06161) புறப்பட்டு, மறுநாள் காலை 8.45 மணிக்கு மதுரையை சென்றடையும்.இந்த ரயில் தாம்பரம், செங்கல்பட்டு, மேல்மருவத்தூர், விழுப்புரம், பண்ருட்டி, கடலூர் துறைமுகம், சிதம்பரம், சீர்காழி, மயிலாடுதுறை, பேரளம், திருவாரூர், நீடாமங் கலம், தஞ்சாவூர், திருச்சி, மணப்பாறை, திண்டுக்கல், கொடைக்கானல் ரோடு வழியாக மதுரையை சென்றடையும்.

மதுரையில் இருந்து ஏப்.23ம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு மெமு முன்பதிவில்லாத விரைவு ரயில் (06162) புறப்பட்டு, அதே நாள் இரவு 11 மணிக்கு தாம்பரத்தை வந்தடையும். இந்த ரயில் கொடைக்கானல் ரோடு, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, அரியலூர், விருத்தாசலம், விழுப்புரம், செங்கல்பட்டு வழியாக தாம்பரத்தை வந்தடையும்.எழும்பூர் போத்தனூர் சிறப்பு ரயிலுக்கான (06179) டிக்கெட் முன்பதிவு இன்று (ஏப்.22) காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேனி மாவட்ட வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தக்கூடிய தேர்தல் உபகரணங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

உத்தமபாளையம் ஏப்.23-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு,போடிநாயக்கனூர் மற்றும் உத்தமபாளையம் வட்டாட்சியர் அலுவலகங்களில் தேர்தல் உபகணரங்களை வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு, தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு தேனிமாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199.பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. அதனடிப்படையில், இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள தேர்தல் உபகரணங்களை தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, 198.ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதியில் உள்ள 344 வாக்குச்சாவடி மையங்களுக்கும், 199. பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 360 வாக்குச்சாவடி மையங்களுக்கும், 200.போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 346 வாக்குச்சாவடி மையங்களுக்கும், 201.கம்பம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 345 வாக்குச்சாவடி மையங்களுக்கும் என மொத்தம் 1395 வாக்குச்சாவடி மையங்களுக்கு பிரித்து வழங்கப்படும்.

அதன்படி, ஒவ்வொரு வாக்குச்சாவடி மையங்களுக்கும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், படிவங்கள், பதிவேடுகள், உறைகள், அடையாள அட்டைகள், அழியா மை, வாக்காளர் பட்டியல், வாக்குப்பதிவு முடிவுற்றபின் மின்னணு வாக்குப்பதிவு பெட்டிகளில் சீலிடுவதற்கு மெழுகுவர்த்தி, மெடல் சீல், முகவரி அட்டைகள் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட தேர்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில், 20க்கும் மேற்பட்ட எழுதுபொருட்களும் அடங்கும். அதனடிப்படையில் இன்று போடிநாயக்கனூர் மற்றும் உத்தமபாளையம் வட்டாட்சியர் அலுவலகங்களிலிருந்து 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கு தேர்தல் உபகரணங்களை பிரித்து கொண்டு செல்லும் பொருட்டு, தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து, உத்தமபாளையம் வட்டாட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மண்டல அலுவலர்களுக்கான (Zonal Officers) பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் மண்டல அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் மற்றும் வழிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில், தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வழங்கல்அலுவலர் .நல்லையா, தேர்தல் நடத்தும் அலுவலர் / உத்தமபாளையம் வருவாய்கோட்டாட்சியர் .சையத் முகைதீன் இப்ராஹிம், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / வட்டாட்சியர்கள் சந்திரசேகரன் (போடிநாயக்கனூர்), பாலசண்முகம் (உத்தமபாளையம்), செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



# தாம்பரம் வட்டாட்சியர் அலுவலக ஊழல் மற்றும் அநீதிகளுக்கு எதிராக போராட்டம் சமூக ஆர்வலர்கள் அதிரடி கைது

தாம்பரம் ஏப்.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நிலவி வரும் முறைகேடுகள் மற்றும் 23 வருடங்களாக பட்டா வழங்காமல் உயர் நீதிமன்ற உத்தரவை அமல் படுத்தாமல் அலைக்கழிக்கும் அதிகாரிகளைக் கண்டித்து, சமூக ஆர்வலர் தி.கார்த்திக் கண்ணன், மூத்த குடிமகன் பக்தவச்சலம் என்பவர்களை தாக்கிய தாம்பரம் மண்டல துணை வட்டாட்சியர் சார்லஸ் மற்றும் அவருடம் இருந்த இருபதுக்கும் மேற்பட்ட வருவாய்த்துறை ரவுடி அதிகாரிகளை கண்டித்து தாம்பரம் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு 'மக்களுக்கான மக்கள் இயக்கம்' சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மண்டல துணை வட்டாட்சியர் சார்லஸ், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் சமிளா மற்றும் பிரிவு உதவியாளர் ரியாஸ் ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும், திமிஸி பதிவு செய்யவும் இவர்களுக்குத் துணை போகும் வட்டாட்சியர் நடராஜன் மீது விசாரணைக் கமிஷன் அமைக்கவும் இப்போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் போது, போராட்டம் குறித்த முறையான அறிவிப்பு வழங்கப்பட்டும் நிராகரிப்பு செய்யாமல், தாம்பரம் காவல் ஆய்வாளர் செல்லதுரை தலைமையிலான 30க்கும் மேற்பட்ட போலீசார் போராட்டத்தைத் தடுத்து நிறுத்தினர்.

அதனைத் தொடர்ந்து, மக்களுக்கான மக்கள் இயக்கம் மாநில பொதுச் செயலாளர் தி.கார்த்திக் கண்ணன், மூத்த குடிமக்கள் நலச் சங்கத் தலைவர் எஸ்.மீனாட்சி சுந்தரம், பாதிக்கப்பட்ட சமூக ஆர்வலர் நி.பக்தவச்சலம், மற்றும் விஎல்டி ஆர்.கிருஷ்ணன் உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த எழுச்சிமிக்கப் போராட்டம் மற்றும் கைது நடவடிக்கை காரணமாக, மாவட்ட நிர்வாகம் முதல் தலைமைச் செயலகம் வரை பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அதிகாரிகளின் அநீதி குறித்து தாம்பரம் வட்டாட்சியர் உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என வருவாய்த்துறை வட்டாரத்தில் அழுத்தம் அதிகரித்துள்ளது.

# அரசுப் பேருந்து ஓட்டுநர்களை வேறு பணிகளில் ஈடுபடுத்துவதை தடுக்கக் கோரி வழக்கு

## போக்குவரத்து துறை பதிலளிக்க உத்தரவு



மதுரை, ஏப்.23-

அரசுப் பேருந்து ஓட்டுநர், நடத்துநர்களை வேறு பணிகளில் ஈடுபடுத்துவதை தடுக்கக்கோரிய வழக்கில் போக்குவரத்துத் துறை பதில் மனு தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாடு மாநில போக்குவரத்து ஊழியர் கூட்டமைப்பு சார்பில், உயர் நீதிமன்ற அமர்வில் தாக்கல் செய்த மனு: அரசுப் போக்குவரத்து கழகங்களில் பணிபுரியும் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களை அவர்களுக்கான பணிகளைச் செய்யாமல், அலுவலக வேலை உள்ளிட்ட வேறு பணிகளில் ஈடுபடுத்தி சம்பளம் வழங்குவது சட்டவிரோதம்.

மேலும், 2018ம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணைகள் மற்றும் 1995, 2005 ஒப்பந்தங்களின்படி, ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களை பிற பணிகளில் ஈடுபடுத்தப்படக்கூடாது. ஆயிரக்கணக்கான பணியாளர்கள் "வேறு பணிகளில்" இருப்பதால், பணிச்சுமை அதிகரித்து, மீதமுள்ள பணியாளர்கள் அதிக நேரம் வேலை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களை அவர்களது இயல்பான பணிகளில் மட்டுமே ஈடுபடுத்த உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுருந்தது. இந்த மனு நீதிபதிகள் சதீஷ் குமார், ஜோதி ராமன் முன்பு விசாரணைக்கு வந்தது. பின்னர் நீதிபதிகள், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர்கள் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

# மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வாக்கு சாவடிக்குஅனுப்பும் பணி



ராணிப்பேட்டை ஏப்.23-

ராணிப்பேட்டை ரவட்டம் அரக்கோணம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் விவி பேட் இயந்திரங்கள் ஆகியவற்றை அந்தந்த வாக்குச்சாவடி மையத்துக்கு போலீஸ் பாதுகாப்புடன் அனுப்பும் பணிகள் நடைபெற்றது.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் தனி சட்டமன்ற தொகுதியில் விசிக, அதிமுக உள்ளிட்ட 13 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இங்கு மொத்தம் 284 வாக்கு சாவடி மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. வேட்பாளரின் பெயர், புகைப்படம் மற்றும் சின்னங்கள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பொருத்தும் பணிகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் யாருக்கு வாக்களித்தோம் என்பதை தெரிந்து கொள்ளும் விவி பேட் இயந்திரம் ஆகியவை அந்தந்த வாக்குச்சாவடி மையத்துக்கு வேனில் அனுப்பும் பணிகள் அரக்கோணம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது . இந்த பணிகளை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ரமேஷ் பார்வையிட்டு ஆய்வு செய்தார் . மேலும் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அந்தந்த வாக்குச்சாவடி மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதனுடன் வாக்குப்பதிவு நாளில் வாக்காளர்களுக்கு விரலில் வைக்க பயன்படும் மை, கவர்கள், அரக்கு, மெழுகுவர்த்தி, பென்சில், பேனா உள்ளிட்ட 115 பொருட்கள், மின்னணு வாக்கு பதிவு இயந்திரத்துடன் அனுப்பி வைக்கப்பட்டது.

# தேனி மாவட்டத்தில் வாக்குப்பதிவு நாளன்று தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குப்பதிவு அலுவலர்கள், நுண்பார்வையாளர்கள் மற்றும் காவலர்களுக்கு கணினி மூலம் சுழற்சி முறையில் மூன்றாம் கட்ட பணிகள் ஒதுக்கீடு





தேனி ஏப்.23-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வாக்குப்பதிவு நாளன்று தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குப்பதிவு அலுவலர்கள், நுண்பார்வையாளர்கள் மற்றும் காவலர்களுக்கு கணினி மூலம் சுழற்சி முறையில் மூன்றாம் கட்ட (Third Randomization) பணிகள் ஒதுக்கீடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தலைமையில், பொதுப்பார்வையாளர்கள்.பீம் சிங், வினய் பிரதாப் சிங், மற்றும் காவல் பார்வையாளர். சிவப்பிரகாஷ் தேவராஜ் ,ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. தேனி மாவட்டத்தில் மொத்தம் உள்ள 1,395 வாக்குச்சாவடிமையங்களுக்கு 1674 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும் (PO), நிலை1 (PO-1) வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 1674 நபர்களும், நிலை 2 (PO-2) வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 1674 நபர்களும், நிலை 3 (PO-3) வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 1674 நபர்களும் என மொத்தம் 6,696 நபர்கள் வாக்குப்பதிவு பணியில் ஈடுபட உள்ளார்கள். தேனி மாவட்டத்தில் பதற்றமான வாக்குச்சாவடி அமைவிடங்களாக கண்டறியப்பட்டுள்ள அதாவது, 198.ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதியில் 55 வாக்குச்சாவடி அமைவிடங்களுக்கு 73 நுண்பார்வையாளர்களும், 199.பெரியகுளம் (தனி) சட்டமன்றத் தொகுதியில் 43 வாக்குச்சாவடி அமைவிடங்களுக்கு 52 நுண்பார்வையாளர்களும், 200.போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதியில் 39 வாக்குச்சாவடி அமைவிடங்களுக்கு 53 நுண்பார்வையாளர்களும் மற்றும் 201.கம்பம் சட்டமன்றத் தொகுதியில் 52 வாக்குச்சாவடி அமைவிடங்களுக்கு 62 நுண்பார்வையாளர்களும் என மொத்தம் 189 பதற்றமான வாக்குச்சாவடி அமைவிடங்களுக்கு 240 நுண்பார்வையாளர்கள் வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை பணியில் ஈடுபட உள்ளார்கள். மேலும், 594 வாக்குச்சாவடி அமைவிடங்களில் வாக்குப்பதிவு நாளன்று பாதுகாப்பு பணியில் 629 காவலர்கள் ஈடுபட உள்ளார்கள். மேற்படி, வாக்குப்பதிவு பணியில் ஈடுபட உள்ள அலுவலர்கள் (PO, PO1, PO2, PO3), நுண்பார்வையாளர்கள் (Micro Observer) மற்றும் காவலருக்கான மூன்றாம் கட்ட (Third Randomization) பணிகள் ஒதுக்கீடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் தேர்தல் பொதுப்பார்வையாளர்கள் மற்றும் காவல் பார்வையாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் ராமகிருஷ்ணன் (பொது),. காசி (தேர்தல்), கதிர்வேல் (நிலம்), செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் .ஏ.எடிசன், வட்டாட்சியர் (தேர்தல்).சுருளி உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# ஓசூர்: தேர்தலில் வாக்களிக்க பெங்களூருவிலிருந்து காரில் திரும்பியபோது விபத்து

## 3 இளைஞர்கள் உயிரிழப்பு

ஓசூர், ஏப்.23-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே சானமாவு வனப்பகுதியில் இன்று அதிகாலை நிகழ்ந்த கோர விபத்தில், பெங்களூரில் இருந்து தேர்தலில் வாக்களிக்க ஊர் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் வீரமணி (25) என்பவர் சிப்ஸ் கடை நடத்தி வந்தார். அவருடன் அதே பகுதியில் உள்ள சிப்ஸ் கடைகளில் வேலை செய்து வந்த பிரதீப் மற்றும் மாரி, சதீஷ் குமார் ஆகியோர் தமிழகத்தில் நடைபெற்ற வரும் சட்டமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக தங்களது சொந்த ஊரான பென்னாகரத்திற்கு காரில் புறப்பட்டுள்ளனர்.இன்று அதிகாலை சுமார் 4 மணி அளவில், ஓசூர் அருகே உள்ள சானமாவு வனப்பகுதி வழியாக கார் சென்று கொண்டிருந்தது. அப்போது உடுமலைபேட்டையில் இருந்து ஓசூர் நோக்கி வந்த தனியார் சொகுசு பேருந்தும், காரும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த பயங்கர மோதலில் கார் அப்பளம் போல் நொறுங்கியது. காரில் பயணம் செய்த வீரமணி (25), பிரதீப், மாரி ஆகிய மூன்று இளைஞர்களும் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். இவர்களுடன் பயணித்த சதீஷ் குமார் (25) என்பவர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார். அவர் தற்போது சிகிச்சைக்காக ஓசூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த உத்தனப் பள்ளி போலீஸார், உயிரிழந்தவர்களின் உடல்களைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஓசூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்து விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தேர்தலில் வாக்களிக்க ஆர்வத்துடன் ஊருக்குச் சென்ற இளைஞர்கள் விபத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# 2வது ஈரான் கப்பலை கைப்பற்றிய அமெரிக்கா

வாஷிங்டன், ஏப்.23-

கடந்த 19ல் ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் ஈரானின் தவுஸ்கா சரக்கு கப்பலை அமெரிக்க கடற்படை கைப்பற்றியது.

இதைத் தொடர்ந்து டிபானி என்று பெயரிடப்பட்ட மற்றொரு ஈரானிய எண்ணெய் கப்பலை அமெரிக்க கடற்படை நேற்று கைப்பற்றியது. இந்த எண்ணெய் கப்பல் 330 மீட்டர் நீளம் கொண்டது. 3 லட்சம் டன் கச்சா எண்ணெயை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டது. ஈரான் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட டிபானி கப்பல் சிங்கப்பூரை நோக்கி சென்று கொண்டிருந்தது.

அமெரிக்க கடற்படை வீரர்கள் நேற்று ஹெலிகாப்டர்கள் மூலம் டிபானி கப்பலில் இறங்கி அந்த கப்பலை கைப்பற்றினர். இதுதொடர்பான வீடியோவை அமெரிக்க கடற்படை வெளியிட்டு உள்ளது. அதோடு வெளியிடப்பட்ட பதிவில், "பொருளாதார தடை விதிக்கப்பட்ட ஈரான் கப்பலை சர்வதேச கடல் பகுதியில் கைப்பற்றினோம். தடை செய்யப்பட்ட எண்ணெய் கப்பல்களின் போக்குவரத்தை அனுமதிக்க மாட்டோம்'' என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஈரானின் சரக்கு, எண்ணெய் கப்பல்களை கைப்பற்றுவது போர் நிறுத்த மீறல் ஆகும் என்று அந்த நாட்டு தலைவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். இதுகுறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், "போர் நிறுத்தத்தை பலமுறை ஈரான் மீறியிருக்கிறது'' என்று குறிப்பிட்டு உள்ளார்.

# தேனி மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக விழிப்புணர்வு பேரணியை மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் அவர்கள் தொடங்கி வைத்தார்




தேனி ஏப்.23-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக தேனி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு வாக்காளர்களிடையே 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் பணிபுரியும் களப்பணியாளர்கள் பங்கேற்ற விழிப்புணர்வுப் பேரணியை மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ளது. வாக்காளர்கள் அனைவரும் 100% வாக்களிப்பை உறுதி செய்வதற்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தொடர்ந்து இருசக்கர வாகனப் பேரணிகள், கையெழுத்து இயக்கம், சுவரொட்டி விளம்பரம், துண்டுப்பிரசுரம் வழங்குதல், ரங்கோலி, நடைபயணப் பேரணி, மனிதசங்கிலி, தெருநாடகம், ராட்சத பலூன், விளம்பரப் பதாகைகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விழிப்புணர்வுப் பணிகள் அனைத்து சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், இன்றையதினம் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் பணிபுரியும் களப்பணியாளர்கள் பங்கேற்ற விழிப்புணர்வுப் பேரணியானது, தேனி ஊராட்சி அலுவலகம் முன்பு தொடங்கி இரயில்வேகேட் வரை சென்று நிறைவு பெற்றது. இப்பேரணியில், 150க்கும் மேற்பட்ட களப்பணியாளர்கள் கலந்து கொண்டு, தேர்தல் தொடர்பான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சந்திரா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், வட்டார வளர்ச்சி அலுவலர் ரவிச்சந்திரன் மற்றும் உதவி திட்ட அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பிஹார் அரசு மருத்துவமனையில் நோயாளிக்கு மருத்துவம் பார்த்த செக்யூரிட்டி வீடியோ வைரல்

பாட்னா, ஏப்.23-

பிஹார் மாநிலம், மேற்கு சம்பரன் மாவட்டம் பகாகா பகுதியில் அரசு மருத்துவமனை உள்ளது. அங்கு வேலை பார்க்கும் செக்யூரிட்டி ஒருவர், நோயாளி ஒருவருக்கு தையல் போட்டு பேண்டேஜ் போடும் புகைப்படம், வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகியுள்ளது.இந்தியில் வெளியான முன்னாபாய் எம்பிபிஎஸ் படத்தில் நடிகர் சஞ்சய் தத், தனது தந்தையின் ஆசைக்காக மருத்துவர் போல நடித்திருந்தார். அது சினிமா ரசிகர்களுக்கு சிரிப்பை வரவழைத்தது. ஆனால் செக்யூரிட்டி செய்த வேலை அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



இது குறித்து போலீஸ் அதிகாரி ஒருவர் கூறும்போது, “பகாகா மருத்துவமனைக்கு அருகே நடந்த டெம்போ, வேன் மோதிக்கொண்ட விபத்தில் பலர் காயமடைந்தனர். இதையடுத்து ஆம்புலன்ஸ் வேனில் காயமடைந்தவர்கள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.அப்போது, மருத்துவமனையில் போதிய ஊழியர்கள் இல்லாததால் அங்கிருந்த செக்யூரிட்டி ஒருவர் நோயாளியின் காயத்தை தையலிட்டு பேண்டேஜ் வைத்துக்கட்டியுள்ளார். இதனை அந்த ஆம்புலன்ஸ் வேன்டிரைவர் வாசிம் அக்தரும், காயமடைந்த சுரேந்திர பாசி என்பவரும் தெரிவித்துள்ளனர்” என்றார்.

இது குறித்து, பகாகா மருத்துவமனை தரப்பில் தற்போது விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனையின் துணை கண்காணிப்பாளர் டாக்டர் அசோக் குமார் திவாரி கூறும்போது, “இந்த மருத்துவமனையில் போதிய டாக்டர்கள், நர்ஸ்கள், ஊழியர்கள் இல்லை. ஆபரேஷன் தியேட்டர் உதவியாளர்கள், கட்டுப்போடும் ஊழியர்கள் பணியிடங்கள் பல ஆண்டுகளாக காலியாக உள்ளன.

இருக்கும் ஊழியர்களை வைத்து மருத்துவமனையை நடத்தி வருகிறோம். விபத்து நடந்த அன்று காயமடைந்தவர்கள் வந்தபோது ஒருவருக்கு அதிகமாக ரத்தப்போக்கு இருந்தது. இதையடுத்து டாக்டர் ஒருவரின் மேற்பார்வையில் தான் அவர் தையல் போட்டார்” என்றார்.

# பிரிட்டனில் இனி 2008க்கு பின் பிறந்தவர்கள் சிகரெட் வாங்க வாழ்நாள் தடை

புதுடெல்லி, ஏப்.23-

2008ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்தவர்கள் சிகரெட் வாங்க வாழ்நாள் தடையைக் கொண்டுவரும் மசோதா ஒன்று பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. புகைப்பழக்கமில்லா தலைமுறையை உருவாக்க இந்தப் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.



பிரிட்டனில் 17 வயது மற்றும் அதற்குக் குறைந்த வயதுடையவர்கள் சிகரெட் வாங்குவதைத் தடை செய்யும் மசோதாவுக்கு பிரிட்டன் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஒப்புதல் அளித்துள்ளன. இதன்படி, 2009ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதிக்குக்குப் பிறகு பிறந்தவர்கள் யாரும் (தற்போது 17 வயதானவர்கள்) சிகரெட் வாங்க முடியாது. பிரிட்டனின் இந்த மசோதாவுக்கு ‘புகையிலை மற்றும் வேப்ஸ்’ எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இது குறித்து சுகாதாரத் துறை அமைச்சர் வெஸ் ஸ்ட்ரீட்டிங் கூறும்போது, “நாட்டின் சுகாதார வரலாற்றில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம். இது புகைப்பழக்கமற்ற முதல் தலைமுறையை உருவாக்க வழிவகுக்கும்” என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, 2022 ஆம் ஆண்டில், புகைப்பிடித்தலுக்கு எதிராக இத்தகைய சட்டத்தை இயற்றிய முதல் நாடாக நியூசிலாந்து திகழ்ந்தது. இச்சட்டத்தின் மூலம், 2008க்குப் பிறகு பிறந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டது. ஆனால், இச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஓராண்டுக்கும் குறைவான காலத்திலேயே, நவம்பர் 2023ல் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ரத்து செய்தது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில், 2007 ஆம் ஆண்டு ஜனவரி 1க்குப் பிறகு பிறந்த எவருக்கும் சிகரெட் விற்பனை செய்வதை மாலத்தீவு தடை செய்தது குறிப்பிடத்தக்கது.

# மாட்டு சாணத்தை கொட்டி வீட்டை நிரப்புவேன்: போலீஸ் அதிகாரிக்கு பாஜக எம்எல்ஏ மிரட்டல்

போபால், ஏப்.23-

ம.பி.யின் பிச்சோர் தொகுதி பாஜக எம்எல்ஏ பிரீத்தம் லோதி. இவரது மகன் தினேஷ் லோதி கடந்த 16ல் சிவபுரி மாவட்டம் கரேரா பகுதியில் காரில் சென்றார்.

அப்போது அவரது கார் மோதி 5 பேர் காயம் அடைந்தனர். இதையடுத்து தினேஷ் லோதியை சிவபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆயுஷ் ஜாக்கர் வரவழைத்து, மீண்டும் கரேரா வர வேண்டாம் என எச்சரித்து அனுப்பினார். இதனால் எம்எல்ஏ பிரீத்தம் லோதி கோபம் அடைந்தார்.



“கரேரா என்ன உங்கள் அப்பாவுக்கு சொந்தமானதா ? எனது மகன் அங்கு செல்வான். துணிவிருந்தால் அவனை தடுத்துப் பார். எங்கள் பின்னணி என்ன வென்று உனக்குத் தெரிந்திருக்க வேண்டும்" என்று பிரீத்தம் லோதி மிரட்டல் விடுத்தார். பிறகு இந்த விவகாரத்தில் "அந்த போலீஸ் அதிகாரியின் வீட்டை மாட்டு சாணத்தால் நிரப்புவேன்" என்றார்.

அவரது பேச்சுக்கு ஐபிஎஸ் அதிகாரிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. பிரீத்தம் லோதி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க் கட்சியான காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

பாஜக செய்தித் தொடர்பாளர் ஹிதேஷ் பாஜ்பாய் கூறுகையில், "நாங்கள் சட்டத்தின் ஆட்சியை நம்புகிறோம். அதே நேரம், அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் பொது வெளியில் பேசும்போது கண்ணியத்தை கடைப்பிடிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்" என்றார்

# விருத்தாசலத்தில் வீடு வாங்குவேன்: பிரேமலதா உறுதி

விருத்தாசலம், ஏப்.23-

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் விருத்தாசலம் தொகுதியில் போட்டியிடும் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா, நேற்று தனது பிரச்சாரத்தை விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் கோயில் முன்பு நிறைவு செய்தார்.

அப்போது பேசிய பிரேமலதா, “விருத்தகிரீஸ்வரர் அருளால் இத்தொகுதியில் நான் வெற்றி பெறுவேன். திமுக கூட்டணி அமோக வெற்றி பெறும். நான் வெற்றி பெற்றதும் ஒவ்வொரு கிராமத்திலும் வீதி வீதியாக சென்று மக்களைச் சந்திந்து நன்றி கூறுவேன். கேப்டன் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து செய்வேன்.

‘விருத்தாசலத்தை மாவட்டமாக்க வேண்டும் ’ என்பது இத்தொகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது. அதை நிச்சயம் நிறைவேற்றுவேன்.

நான் விருத்தாசலத்தில் வீடு வாங்கி இங்கே தங்கி, விருத்தாசலத்தின் மகளாக இருப்பேன். தமிழகத்திலேயே முன்மாதிரி தொகுதியாக விருத்தாசலத்தை மாற்றிக் காட்டுவேன்.

தேமுதிக திமுக கூட்டணியில் இணைந்தவுடன் பல்வேறு விமர்சனங்கள் மூலம் திமுக கூட்டணியில் சலசலப்பை உருவாக்கலாம், குழப்பத்தை ஏற்படுத்தலாம் என எதிர்க்கூட்டணில் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டனர். விசிக தலைவர் திருமாவளவன் தான் அனைவரையும் ஒருங்கிணைத்து, அவற்றையெல்லாம் சரி செய்திருக்கிறார்” என்று தெரிவித்தார்.

# நேபாள புதிய அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம்: காரணம் என்ன?

காத்மாண்டு, ஏப்.23-

நேபாள நாட்டில் மக்கள் போராட்டத்தை எதிர்கொண்டுள்ளது கடந்த மாதம் புதிதாக ஆட்சிக்கு வந்த பிரதமர் பாலேந்திர ஷா தலைமையிலான அரசு. அதற்கான காரணம் என்ன என்பது குறித்து பார்ப்போம்.

கடந்த மாதம் 27ம் தேதி நேபாள பிரதமராக 35 வயதான பாலேந்திர ஷா பதவியேற்றார். இந்நிலையில், அவரது அரசு மக்களின் எதிர்ப்பை பெற்றுள்ளது. கடந்த ஆண்டு அங்கு சர்மா ஒலி தலைமையிலான அரசு, கவிழ்ந்தது. இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது ஜென் ஸீ தலைமுறையினரின் போராட்டம். அதன் பின்னர் இடைக்கால நேபாள அரசை சுசிலா கார்கி வழிநடத்தினார். இதன் பின்னர் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பாலேந்திரா ஷா வெற்றி பெற்று பிரதமர் ஆனார்.



அவரது ஆட்சி அமைந்து ஒரு மாத காலம் கூட பூர்த்தியாகாத நிலையில் மக்களின் எதிர்ப்பை பெற்றுள்ளது. நாடு முழுவதும் மக்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தகவல். இந்தியாவிலிருந்து கொண்டுவரப்படும் 100 ரூபாய்க்கு கூடுதலான மதிப்பு கொண்ட பொருட்களின் மீது கட்டாயச் சுங்க வரியை விதிக்கும் அரசின் முடிவு, அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய மாணவர் அமைப்புகளை தடை செய்யும் அரசின் கொள்கை மற்றும் உள்துறை அமைச்சர் சுதான் குருங் மீதான சொத்து குவிப்பு வழக்கு மற்றும் நிதி முறைகேடு காரணமாக அவர் பதவி விலக வேண்டியும் நேபாளத்தில் போராட்டம் நடைபெற்றது வருகிறது.

புதிய அரசின் சுங்க வரிக் கொள்கை எல்லையோரத்தில் வசிக்கும் சாமானிய மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் என நேபாள மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இப்படி ஒரே நேரத்தில் அரசின் கொள்கை, மாணவர் அமைப்பினர் மற்றும் அமைச்சர் மீதான குற்றச்சாட்டு என்று மூன்று விதமான அழுத்தங்களை பாலேந்திர ஷாவின் அரசு எதிர்கொண்டுள்ளது.

# தங்கம் விலை பவுனுக்கு ரூ.400 குறைவு: இன்றைய சந்தை நிலவரம் என்ன?

சென்னை, ஏப்.23-

22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சென்னையில் இன்று பவுனுக்கு ரூ.400 என விலை குறைந்தது. அதே நேரத்தில் இன்று வெள்ளி விலையில் மாற்றம் ஏதுமில்லை. சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை முதலீடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான போர் தங்கம் விலை மீது தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில், இரு நாடுகளுக்கும் இடையேயான போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பகிர்ந்துள்ளார்.

இந்நிலையில், தங்கம் விலை இன்று குறைந்துள்ளது. சென்னையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.50 மற்றும் பவுனுக்கு ரூ.400 என விலை குறைந்தது. இதனால் ஒரு கிராம் தங்கம் ரூ.14,250க்கும், ஒரு பவுன் ரூ.1,14,000க்கும் விற்பனை ஆகிறது.24 காரட் தங்கம் இன்று பவுனுக்கு ரூ.432 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,24,368க்கும், 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.408 குறைந்து, ஒரு பவுன் ரூ.94,432க்கும் விற்பனை ஆகிறது. வெள்ளி விலை இன்று மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.275, ஒரு கிலோ ரூ.2,75,000க்கும் விற்பனை ஆகிறது.



# வண்டலூர் அண்ணா உயிரியல் பூங்காவுக்கு விடுமுறை!

சென்னை, ஏப்.23-

வண்டலூர் அண்ணா உயிரியல் பூங்காவுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதால் பார்வையாளர்களுக்கு அனுமதியில்லை. பூங்காவில் பணியாற்றும் ஊழியர்கள், தேர்தலில் வாக்களிக்க வசதியாக விடுமுறை விடப்பட்டுள்ளது

# கரூர் கிருஷ்ணராயபுரம் தொகுதியில் விநியோகிக்க வைத்திருந்த 52 குக்கர்கள் பறிமுதல்

கரூர், ஏப்.23-

கிருஷ்ணராயபுரம் தொகுதி புலியூரில் அதிமுக வேட்பாளருக்கு ஆதரவாக குக்கர் விநியோகம் செய்யப்படுவதாக கிடைத்த தகவலை அடுத்து, விசாரணை மேற்கொண்ட பறக்கும் படையை கண்டதும் சம்பந்தப்பட்டவர்கள் குக்கர்களை கீழே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர். தப்பிடியோடியவர்கள் குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் (தனி) தொகுதியில் அதிமுக வேட்பாளராக மருத்துவர் எஸ்.திவ்யா போட்டியிடுகிறார். அவருக்கு ஆதரவாக புலியூர் பகுதியில் வீடு, வீடாக வாக்காளர்களுக்கு குக்கர் வழங்கப்பட்டு வருவதாக பறக்கும் படையினருக்கு தகவல் கிடைத்தது.



பறக்கும் படையினர் சம்பவ இடத்துக்குச் சென்ற நிலையில், குக்கர்களை விநியோகம் செய்தவர்கள் புலியூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் இருக்கும் தனியார் தோட்டத்துக்குள் 52 குக்கர்களை போட்டுவிட்டு தப்பியோடி விட்டனர்.

இதையடுத்து, பறக்கும் படையினர் 52 குக்கர்களை பறிமுதல் செய்து மினி வேனில் ஏற்றி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து தப்பிடியோடியவர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.மேலும், புரவிபாளையம் பகுதியில் ஒரு வீட்டில் 100 குக்கர் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக வந்த தகவலை அடுத்து அங்கு சோதனையிட சென்றனர். வீடு பூட்டப்பட்டிருந்ததால் அங்க சோதனை நடத்த காத்திருந்தனர். அப்போது அப்பகுதியைச் சேர்ந்தவர்கள், ‘இங்கு மட்டும்தான் சோதனையிடுவீர்களா? வேறு சில இடங்களில் வேட்டி, சேலை வழங்குகின்றனர். அங்கு சோதனையிட மாட்டீர்களா?’ என வாக்குவாதம் செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

# பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்றுபட்டுள்ளோம்: பஹல்காம் நினைவு நாளில் உமர் அப்துல்லா அஞ்சலி

புதுடெல்லி, ஏப்.23-

பஹல்காம் தாக்குதலின் ஓராண்டுக்குப் பிறகும் பயங்கரவாதத்துக்கும் வன்முறைக்கும் எதிராக நாம் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்று ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.



கடந்த ஆண்டின் இதே நாளில், ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் சுற்றுலாப் பயணிகள் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த பயணங்கரவாதிகள் இந்த தாக்குதலுக்குக் காரணமாக இருந்தது கண்டறியப்பட்டதை அடுத்து, அந்த நாட்டில் பதுங்கி இருந்த பயங்கரவாதிகளை குறிவைத்து ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையை இந்திய அரசு எடுத்தது. இதில், பாகிஸ்தானில் பதுங்கி இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பஹல்காம் தாக்குதலின் முதலாம் ஆண்டை முன்னிட்டு தலைவர்கள் பலரும் தங்கள் அஞ்சலியை செலுத்தியுள்ளனர்.

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச முதல்வர் உமர் அப்துல்லா வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், “ஓராண்டுக்குப் பிறகும், பயங்கரவாதத்துக்கும் வன்முறைக்கும் எதிராக நாம் ஒன்றுபட்டு நிற்கிறோம். ஜம்மு காஷ்மீரை துன்பங்களிலிருந்தும் அப்பாவி மரணங்களிலிருந்தும் விடுவிப்பதற்கான நமது விருப்பத்தில் நாம் உறுதியாக இருக்கிறோம். அது மீண்டும் ஒருபோதும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய, அனைத்தையும் செய்ய நாம் உறுதியுடன் இருக்கிறோம்.

ஓராண்டுக்கு முன்பு அந்தக் கோழைத்தனமான தாக்குதலில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த குடும்பங்களுடன் நாங்கள் என்றும் ஒற்றுமையாக இருக்கிறோம். அந்தப் பயங்கரவாதத் தாக்குதலில் பலியானவர்களின் ஆன்மாக்கள் அமைதியில் இளைப்பாறட்டும்” என தெரிவித்துள்ளார்.

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள பதிவில், “2025 ஏப்ரல் 22 அன்று ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நடந்த கோழைத்தனமான பயங்கரவாதத் தாக்குதலில் தங்கள் உயிரை இழந்த அப்பாவி மக்களை நினைவுகூர்ந்து, அவர்களுக்கு என் மனமார்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

அவர்களின் அன்புக்குரியவர்கள் மற்றும் குடும்பத்தினரின் நீடித்த துயரத்தில் நாங்களும் பங்கு கொள்கிறோம். நமது தேசத்தின் மீது ஏற்படுத்தப்பட்ட அந்தக் காயங்களை நாம் ஒருபோதும் மறக்க மாட்டோம்.

இந்தியா பல பத்தாண்டுகளாக எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை சகித்து வந்துள்ளது. ஆனால் இன்று நமது பதில் உறுதியானதாகவும், தீர்க்கமானதாகவும், அசைக்க முடியாததாகவும் உள்ளது. நமது மக்களுக்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது நமது ஒற்றுமையைக் குலைக்கவோ செய்யப்படும் எந்தவொரு முயற்சியும் வலிமையுடனும் தெளிவுடனும் எதிர்கொள்ளப்படும் என்பதை நமது உறுதியான நடவடிக்கைகளின் மூலம் நிரூபித்துள்ளோம்” என தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், “கடந்த ஆண்டு நடந்த கொடூரமான பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் இழந்த அப்பாவி உயிர்களை இந்த நாளில் நாம் நினைவுகூர்கிறோம். நமது மக்கள் அடைந்த துயரமும் வலியும் ஒவ்வொரு இந்தியனின் இதயத்திலும் இன்னமும் உள்ளது.

பயங்கரவாதம் என்பது மனிதகுலத்தின் மிகப்பெரிய எதிரி, அதை எதிர்த்துப் போராடித் தோற்கடிக்க நாம் ஒன்றுபட வேண்டும். பயங்கரவாதத்துக்கும் அதற்குத் துணை நிற்பவர்களுக்கும் எதிரான சகிப்புத்தன்மையற்ற கொள்கையை இந்தியா தொடரும்” என்று தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161